9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2023-2024, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2023–2024 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

MESSAGE

"In pursuance of Article *205,* read with clause *(3)* of Article *203* of the Constitution of India, I, R.N. Ravi, Governor of Tamil Nadu, hereby give my recommendation, for moving in the Tamil Nadu Legislative Assembly, the demands for further grants for the year *2023–2024.*"

10. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), முன்மொழிதல். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023–2024 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 9–10–2023 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2023–2024 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.